
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

புத்தகம் வாசிப்போம்......................................2

சிலப்பதிகாரம்........................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 6

கவிதைகள். ........................................................... 7



சிந்தனை 7 செயல் 5 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். ஏப்ரல் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## காஷ்மீர் ரோஜா சிவப்பா ? வெள்ளையா ?

காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரமான அந்த நிகழ்வு, நெஞ்சை பதறச் செய்கிறது. பயங்கரவாதிகளின் துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியானவர்கள் எந்த மதத்தை, இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதை விட, நம் சகோதரர்கள் என்ற உணர்வு நமக்கு வந்தாக வேண்டும். இந்த கோழைத்தன மான தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டவர்களும், அவர்களைப் பின்னால் இருந்து இயக்கியவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இதுபோன்ற தீவிரவாத செயல்களுக்கு கொடுக்கும் பதிலடி தீவிரவாதத்தை அடியோடு வேரறுப்பதாக இருக்க வேண்டும். இந்தியத் திருநாட்டின் இறையாண்மையை நாம் உறுதியுடன் காப்பாற்ற வேண்டும். ஒன்றிய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அதேசமயம் சில கேள்விகளும் நம்முள் எழுகின்றன.

காஷ்மீர் பாதுகாப்பான பகுதியாக மாறிவிட்டது என்று கருதிதான் சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வரத்தொடங்கினர். ஒரு கோவில் திருவிழா என்றால் கூட, அங்கு பாதுகாப்பு பணியில் காவலர்கள் கூடுதலாக ஈடுபடுத்தப்படுகின் றனர். அப்படியிருக்க ஆயிரக்கணக்காக சுற்றுலாப் பயணிகள் கூடுகின்ற இடத்தில், அதுவும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளான பகுதியில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாதது பெருங் குறையாகவேத் தோன்றுகிறது. அதுமட்டுமன்றி நம் உளவுத்துறையும் சற்று சறுக்கிவிட்டது என்று கருதவும் இடமுள்ளது.

எல்லாவற்றையும் விட, மிகவும் கண்டிக்கத்தக்கது பிரிவினையைத் தூண்டுகின்ற ஒரு செய்தி தாக்குதலுக்குப் பிறகு பரவியதுதான். “இந்துக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இந்து அமைப்புகளே என்ன செய்கிறீர்கள்? பொங்கி எழ வேண்டாமா? வீதியில் இறங்கி போராட வேண்டாமா? நீங்கள் இப்படி இருந்தால் நாம் இந்து ராஜ்யம் எப்படி அடைவது?” என்ற செய்தி புலனத்தில் உலா வந்தது. தங்கள் எண்ணங்களில் தீவிர வாதத்தை, வெறுப்புணர்வை அடைகாத்துக் கொண்டிருக்கும் இவர்களும் அமைதியான வாழ்வுக்கு அச்சுறுத்தலாக உள்ளவர்களே!. பயங்கரவாதம் என்னும் நெருப்புக்கு இவர்கள் நெய் வார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தீவிரவாதிகளின் தொடர் வன்முறையால் இந்தியா பல்வேறு இழப்புகளைச் சந்தித்துள்ளது. குறிப்பாக காஷ்மீரின் பொருளாதாரமும், அங்குள்ள மக்களின் வாழ்வாதாரமும் சரிவடைந்துள்ளது. காஷ்மீர் ரோஜா இரத்தக் கறைபடிந்த சிவப்பாக மாறியுள்ளது. அது வெள்ளையாக மாற வேண்டும். நிலையான அமைதிக்கு உரிய நடவடிக்கையாக தீவிரவாத செயல்கள் எங்கிருந்து தோன்றுகின்றதோ அதை முறியடிக்க வேண்டும். செயலில் துல்லியமும், உறுதியும் வேண்டும்.

**இளைதாக முள்மரம் கொல்க, களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.** .....குறள்



.......ஆசிரியர்

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

முன்னாள் அமெரிக்க குடியரசுதலைவர் ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை கூறினார். “என்மீது சாட்டப்படும் குற்றங்களுக்கு விடையளிப்பது ஒருபுறமிருக்கட்டும், நான் அவற்றைப் படிக்கத் துவங்கினாலே நான் வேறு வேலை எதையும் செய்ய முடியாது. நானறிந்த வரையில், என்னால் முடிந்த வரையில் என் காரியத்தைச் சிறப்பாகச் செய்யவே முயல்கிறேன். அதன் முடிவுகள், நான் செய்தவை சரி என்று நிரூபிக்குமானால் எனக்கெதிராகத் தொடுக்கப்படும் கணைகள் அர்த்தமற்றவையாகப் போகும். அந்த முடிவுகள் நான் செய்த காரியங்கள் தவறு என்று நிரூபிக்குமானால், பத்து தேவதைகள் வந்து எனக்குப் பக்கபலமாக நின்றால்கூட எனக்கு உதவி செய்யாது.”

அரசாங்கத்தில் செயல் புரியும் வாய்ப்பில் அமைச்சர்களாக அமர்ந்திருப்போர், ஆபிரகாம் லிங்கன் கூற்றை எழுதி வைத்துக் கொள்வது நல்லது. ஏனெனில் நன்மையும் செயலும், நல்ல முடிவுகளும்தான் அவர்கள் சாதனையை உயர்த்துமே தவிர, எதிர்க்கட்சிகள் சீண்டிவிடும் கண்டனமல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே பிறர் அபிப்பிராயத்திற்காக உங்கள் கொள்கைகளை மாற்றிக் கொண்டே இருக் காதீர்கள். பிறர் நம் அபிப்பிராயத்தை ஏற்கவில்லை என்பதற்காக இடிந்து போகா தீர்கள். பிறர் கேட்கிறார்கள் என்பதற்காக ஒரு காரியம் செய்துவிட்டு பின்னால் வருத்தப்படாதீர்கள். .........

நன்றி...கங்கை புத்தக நிலையம்



## புத்தகம் வாசிப்போம்..

முனைவர்.லெ.பாஸ்கர்

புத்தகம் வெறும் காகிதத்தால் ஆனதுதான். ஆனால் பலருக்கு அதுவே சிறந்த ஆயுதம். புத்தகம் ஒன்றை வாசிக்கும் போது, நாம் எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதை உணருகின் றோம். மனிதனுக்கும், புத்தகத்திற்கும் உள்ள உறவு தலைமுறை தாண்டியும் நிலைத்து நிற்கும். பேச வைக்கும், யோசிக்க வைக்கும், செயல்பட வைக்கும். புத்தகம், நம் அகத்தில் பெரும் மாற்றத்தையும், வாழ்வில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும். புத்தகங்களை நேசித்து தொடர்ந்து வாசித்து வந்தால், வாழ்வில் நிச்சயம் வலி இருக்காது. மாறாக வழி பிறக்கும்.

பாடப்புத்தகங்களைத் தாண்டி நம் வாழ்வை வளமாக்கும் எண்ணற்ற அரிய நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று, டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி எழுதிய “எண்ணங்கள்” என்ற அறிவுப்பெட்டகம். எல்லோரும் வாசித்துப் பயனுற வேண்டிய நூல். அது, நல்லெண்ணங்களின் வலிமை பற்றித் தெளிவாக எடுத்துரைப்பதோடு நம் உள்ளத்திலே தன்னம்பிக்கையை வளர்க்கின்றது.

உறவுகள் உங்களை கைவிட்டாலும் கூட, உயர்ந்த நூல்கள் உங்களை ஒருபோதும் கைவிடுவதில்லை. புத்தக வாசிப்பு - மகிழ்ச்சியைத் தருகிறது, மனஅமைதியைத் தருகிறது, உலகைப் புரிந்து கொள்ளச் செய்கிறது. கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் எழுச்சியைத் தருகிறது, வலிமையைத் தருகிறது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மிட்டாய், விளையாட்டுப் பொம்மை வாங்கிக் கொடுப்ப தோடு நன்னெறி நூல்கள் வாங்கிக் கொடுத்து அவர்களிடம் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இன்று இல்லையென்றாலும் என்றாவது ஒருநாள் அது அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

புத்தகங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றவை. நல்ல புத்தகங் களைத் தேர்ந்தெடுத்து வாசிப்போம்! நாகரிகத்தில் வளர்ச்சி அடைவோம்!



# சிலப்பதிகாரம் காவியம்

**மதுரைக் காண்டம். வாழ்வில் மீண்டும் மலர்ச்சியைக் காண மதுரை மாநகருக்குச் சென்ற கோவலன் கண்ணகி இருவரின் முடிவும், மதுரையின் அழிவும்.**

**மரு.த.இராசலிங்கம்.**

**255.கொலையுண்ட இடத்தை மக்கள் காண்பித்தல்**

வசையொன்று வந்ததுவே மதுரைக் கென்று
வருத்தமுடன் வாட்டமுற்ற மக்கள் அங்கே
அசைவற்று நின்றிடாமல் ஆர்ப்ப ரித்து
அவளுக்கு முன்சென்று ஓடி னாரே !
விசையுடனே செல்கின்றகைம்பெண்ணுக்கு
விருப்புடனே செய்கின்ற கடமை யாக
திசையதனைக் காட்டினாரே! பொல்லாசூதும்
தீதுநடந்(த) இடத்தையும் காட்டி னாரே!

**256.கண்டாள் கோவலனை**

மண்சிவக்க குருதியும் சூழ
மாய்ந்திட்ட மணாளனைக் கண்டாள்!
கண்ணிரண்டில் பிழம்பென தீயும்
கரித்திடவே கணவனைக் கண்டாள்!
பெண்ணவளும் பேசிடப், பேசா
பேச்சற்ற உடலையே கண்டாள்!
தான்நோக்க தன்னையவன் நோக்கா
தாங்கொண்ணா கோலமே கண்டாள்!

கொண்டவனின் கொடுங்கோலம் கண்ட
வள்தான்
கொதிப்புடனே உடல்மேலே படர்ந்து
வீழ்ந்தாள்.
கண்டவரும் கண்கலங்கி நிற்கும் வண்ணம்
கதறியவள் கனலெனவே நெஞ்சம்வெந்தாள்
தண்டதுவும் அறுந்துவிட்ட தளிராய் பூவாய்
தன்னுடலும் சோர்ந்திடவேஅழுதுமாய்ந்தாள்
பெண்டவளும் கோவலனைமடியில்வைத்தே
பெற்றபிள்ளை பறிகொடுத்த தாயாய்ஆனாள்.

**257.கண்ணகி சூளுரைத்தல்**

யாருமில்லா மருள்மாலையில் தனியே நீயும்
யாக்கையின் மணிமார்பும் தரையில் மூழ்க
பாரும்உனை பழிதூற்ற பாழும் மன்னன்
பாண்டியனின் பாவத்தால் வீழ்ந்து விட்டாய்.
நீருகின்றேன் மனசெங்கும் பொசுங்கி வேக
நீகுற்றம் இழைக்கவில்லைஉண்மையறிந்தே
கூறுகின்றேன்!கொண்டபழிதுடைப்பேன்நானும்
குமுறியவள் கண்ணகிதான் சூளு ரைத்தாள்.

**258.தெய்வங்கள் உளதோ?**

கொழுநர்க்கு உற்றதொரு துன்பம் தாங்கும்
குலக்கொடியாய் பெண்டிர்தாம் உளரோஇங்கு?
விழுமியதன் செயலால்நற் குடியைத் தாங்கும்
வேரான சான்றோரும் உளரோ இங்கு?
பழுதில்லா பக்குவத்தால் பாரினைத் தாங்கும்
பழம்போலும் பண்புடையார் உளரோ இங்கு?
தொழுதிட்ட கைகளையே தூக்கித் தாங்கும்
தூமலர்ந்த தெய்வங்கள் உளதோ இங்கு?

**259.வேந்தனைக் காண்பேன்!**

வீறுகொண்டு எழுந்தவள் நின்றாள்
விசனமுடன் சுற்றியே பார்த்தாள்
தாருகொண்டு என்னவர் உடலைத்
தான்மூட முன்வரு வீரோ?
கூறுவீரோ? மாநகர் கூடல்
கோலோச்சும் அரண்மனை வழியை!
நேருக்கு நேரது நானும்
நெடுவேந்தன் காண்பேன் என்றாள்.

## 260.அரண்மனை நோக்கிச் சென்றாள்

தெய்வத்தின் ஆணையோ என்று
திகைத்திட்ட மக்களின் கூட்டம்
மெய்யான கண்ணகி கூற்றை
மேலாக கருத்தினில் ஏற்று
செய்ததுவே உதவிகள், சுற்றம்
செய்வதுபோல் செவ்வன செய்து
எய்திட்ட அம்பென அவளும்
ஏகுகின்றாள் அரண்மனை நோக்கி.

## 261.அறம் காக்கச் செல்கின்றாள்

பாய்ந்தோடும் வெள்ளமென
பாலைநிலத்து வெய்யிலென
காய்ந்திட்ட மலராக
கண்ணகியாள் செல்கின்றாள்!

மாய்ந்திடாத மானமென
மழுவதனின் கூர்மையென
ஓய்ந்திடாத அலையாக
ஓடோடிச் செல்கின்றாள்!

சுழன்றடிக்கும் சூறையென
சுடுகின்ற பொட்டலென
முழங்கிட்ட சங்காக
மூச்சிரைக்க செல்கின்றாள்!

வழங்கிடாத வானமென
வந்தழிக்கும் மின்னலென
கழன்றோடும் தேராக
கன்னியவள் செல்கின்றாள்!

கொந்தளிக்கும் ஆழியென
கொடுமைக்கு விடியலென
வெந்திட்ட சுண்ணமாக
விரைவாகச் செல்கின்றாள்!

உந்துகின்ற வீரமென
உள்ளத்தின் ஓலமென
அந்திசாயும் பொழுதினிலே
அறம்காக்கச் செல்கின்றாள்!

## 262.அரண்மனை வாயிலில்

விரிந்த கூந்தலுடன்
வெறித்த பார்வையுடன்
அரிவையும் அடைந்திட்டாள்
அரண்மனை வாயில்தான்!

எரியும் நெருப்பெனவே
எதிரில் நின்றவள்தான்
தெரியும் வெம்மைகண்டு
திகைத்தான் வாயிலோன்தான்!

........................தொடரும்.

**இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் காப்பியத்தை, அதன் உட்கருவை , கதையை மாற்றாமல், சில பகுதிகளை வேண்டாம் என்று விடுவித்தும், கதையின் சீரான போக்கை கருத்தில் கொண்டு சில இடங்களை நிரவல் செய்தும் எனது நடையில், எளிய மரபுக்கவிதைகளாக எழுதி வருகிறேன் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
## கலித்தொகை --- பாலைக்கலி

வணிகம் பொருட்டு மனைவியைப் பிரிந்து வெளிநாட்டுக்கு கணவன் செல்லும்போது, அந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்ளாமல், மனைவியின் கண்கள் சிந்துகின்ற கண்ணீர்த் துளிகளை, விளக்கின் எரிகின்ற திரியிலிருந்து சொட்டும் சூடான எண்ணெய் துளிகளுக்கு உவமையாகப் பாடுகிறது பாலைக்கலி.
**புரி அவிழ் நறு நீலம் புரை உண் கண் கலும்பு ஆனா**,
**திரி உமிழ் நெய்யே போல்**.....என்ற வரிகளில் அந்த உவமையழகு உள்ளத்தை தொடுகிறது.

இரக்கமில்லாமல் மனைவியைப் பிரிந்து கணவன் செல்லும் போது, மனைவியின் நிலையோ, தண்ணீரை ஏந்திப் பருகிய பின்னர் வீசி எறிந்துவிடும் பனங்குடை போன்றது என்று படிப்போர் உள்ளத்திலே இரக்க உணர்வைக் கசியச் செய்கிறது இந்த உவமையழகு
**தோள் நலம் உண்டு துறக்கப்பட்டோர்**
**வேள் நீர் உண்ட குடை ஓரன்னர்**

சில சூழ்நிலைகளில் நீண்ட நாள்கள் மனைவியைப் பிரிந்து கணவன் வணிகம் பொருட்டு சென்று விடுவதுண்டு. அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களை, குடியிருப்போர் காலிசெய்து போனபின் விளங்கும் பாழ்பட்ட ஊருக்குச் சமமானவர்கள் என்று ஆற்றாமையை இவ்வாறு உவமையோடு வெளிப்படுத்துகிறது பாலைக்கலி.
**நல்குநர் புரிந்து நலன் உணப்பட்டோர்**
**அல்குநர் போகிய ஊர் ஓரன்னர்.**

இவ்வாறு பிரிவாற்றாமையின் துன்பத்தையெல்லாம் எடுத்துக்காட்டிய புலவர் பெருமகனார், தோழியின் கூற்று மூலம் தலைவிக்கு ஆறுதல் தருகிறார். அப்படி என்னதான் தோழி தலைவியிடம் சொல்கிறாள்?
**திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய**
**மருந்து போல், மருந்து ஆகி மனன் உவப்ப**
**பெரும் பெயர் மீளி–பெயர்ந்தனன் செலவே**
திருந்திய உடலுள் மருத்துவன் ஊட்டிய மருந்தைப் போல என் சொற்கள் உன் கணவனின் மன மாசு போக்கும் நன் மருந்தாயின. நீ மனம் களிக்குமாறு பெரும் புகழ் பெற்ற உன் கணவன் நின்னைப் பிரிந்து போகும் எண்ணத்தையை விட்டுவிட்டான். என்று கூற மனம் மகிழ்கிறாள் தலைவி.
இவ்வாறு இல்லறத்தில் கணவன் மனைவிக்கிடையிலான வாழ்வியலில் எடுத்துக்காட்ட விழைவதை உவமையழகுடன் எடுத்துக்கூறி நம் நெஞ்சைக் கொள்ளை கொள்கிறது சங்க இலக்கியம்!

உவமையழகு தொடரும்.....

**மரு.த.இராசலிங்கம்**






ஏப்ரல் 8 டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி பிறந்த நாள். **திருச்சி மாவட்ட ம.ச.இ** சார்பாக சுற்றுச் சூழல் தினமாக கொண்டாடப்பட்டது. நிகழ்வில் பண்பாளர்கள் நீலமேகம், வெ.இரா, இளங்கோ, தாமு, சுமன், மணி, சந்துரு, குமரன்.

**கருவூர் மாவட்ட ம.ச.இ** தன்னம்பிக்கை தின மாக கொண்டாடியது. பண்பாளர்கள் சுகுமார், வெ.பி.முத்து, வை.க.முருகேசன், வீரக்குமார், பழனிச்சாமி மற்றும் உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.





**பெரம்பலூர் மாவட்ட ம.ச.இ** சார்பாக பண்பாளர் ஏ.மார்டின் தலைமையில் துறைமங்கலம் கிராமத்தில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வில் மாவட்டச் செயலாளர் க.சிவக்குமார், பண்பாளர்கள் இராசேந்திரன், வாஞ்சிநாதன், சி.காமராஜ் உள்ளிட்ட உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று மக்களிடம் **மது ஒழிப்பு விழிப்புணர்வு** துண்டு அறிக்கைகளை வழங்கி கையெழுத்து பெற்றனர்.

- **வளமான வாழ்வுக்கும், உயர்வுக்கும் முழுமையான மதுவிலக்கை, போதைப்பொருள் ஒழிப்பை ஆதரிப்பீர்!**
- **நல்ல மதுவோ, கள்ள மதுவோ இரண்டுமே உடலுக்கும், உலகத்துக்கும் கேடுதான்.**
- **நல்ல மது என்று அருந்தினால் அது மெல்ல, மெல்லக் கொல்லும். கள்ள மதுவோ உடனே கொல்லும்!**
- **இயற்கைக்கு முரணானது போதை!**
- **இல்லறத்துக்கு எதிரானது போதை !**
- **பழி, பாவங்களைச் செய்யத் தூண்டும் மது! நண்பனையும் பகைக்கும் அது!**

- **உடலையும் கெடுத்து, உயிரையும் பறித்து, குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கும் மதுவை நாடலாமா?**
- **சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும் மது மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து விடுபடுவதோடு, வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்ற, மதுவாசனை இந்த மண்ணின் வாசனை யாகாமல் தடுக்க,**

**பூரண மதுவிலக்கு, போதை ஒழிப்பு பரப்புரையை இன்றே தொடங்குவோம்!**

## குப்பைகளை எரிப்பதென்றோ ?

அகம்பாவ
அழுக்கை சேமித்தார்
ஆணவக்
குளத்தில் குளித்தார்!

கயவர்
நிறைந்த உலகத்தார்
காசுக்கு
அலைந்திடும் கலகத்தார்!

பொறாமைக்
கயிற்றில் சிக்குண்டார்
போட்டிகளின்
மனதால் தோல்விகண்டார்!

பெட்டிக்குள்
அடங்கும் வாழ்வை
பெருமைப்
பேரின்பமாய்க் கருதுகிறார்!

பொருள்
சேர்க்கும் பார்வைகளால்
இருள்
நோக்கும் இதயமானார்!

அறம்
மறந்தே அலைகின்றார்
அவனியில்
குப்பைகளை எரிப்பதென்றோ ?

கவிஞர்.கலியுகன் கோபி
சென்னை

## பெண் எனும் பேராற்றல்

விண்ணின் வெண்ணிலவே
மண்ணின் மாணிக்கமே
கண்ணாலே கருத்தறியும்
திண்ணிய எண்ணத்தாளே!

அகழ்வாரைத் தாங்கும்
அற்புதநிலப் பெண்ணாய்
இகழ்வாரையும் போற்றி
புகழ்மாலை சூட்டுபவளே!

குளுமை நிலவொளியில்
பசுமைப்புல் வெளியாய்
கருணைக் கடலாகிய
பொறுமைப் பெட்டகமே!

காலங்கள் கடந்தாலும்
கோலங்கள் சிதைந்தாலும்
கண்டம் கடலானாலும்
காடு வீடானாலும்

குடும்பமெனும் கூட்டிலேறி
கொடுமையில் மூழ்கிடினும்
அடுக்கடுக்காய் இன்னல்கள்
அலைஅலையாய் பாய்ந்திடினும்

அழியா ஒளிவிளக்காய்
அணையா சுடரொளியாய்
ஆதாரமாய் தாங்கிடும்
பேராற்றல், பெண்ணே நீயே!

கவிஞர்.தேவிகா பொன்னம்பலம்
தூத்துக்குடி